[14th December 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) No allotment of either wheat or rice was made during the years 1957 and 1958 by the Central Government to this State Government.

SRI N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, ஒரிசா அரிசியை உண்ண மாட்டோம்; உத்திரப் பிரதேச கோதுமையை வாங்க மாட்டோம்; பஞ்சாப் பருப்பை பார்க்கவே மாட்டோம் என்று பிரசாரம் செய்து வருகிற திராவிட மகரிஷிகளுக்குத் தனியாக அரசாங்கம் அரிசி தயார் செய்து கொடுக்கப் போகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி ஏதும் பிரசாரம் நடைபெறுவதாகத் தெரியவில்லை. உணவு விஷயத்தில் யாரும் இந்த மாதிரிப் பிரசாரம் செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the allotment was not made because we did not ask for it or whether it was not allotted in spite of our asking?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of allotment to this Government. There are dealers who get the allotment from the Central Pool.

Nagercoil Transport Depot

MR. SPEAKER : கேள்வி எண். 172. அங்கத்தினர் கனம் டி. எஸ். ராமசாமி சபையில் இல்லாததால் இந்தக் கேள்வியும் அதன் பதிலும் சட்டசபை நடவடிக்கைகளில் பிரசுரிக்கப்படும்.

* 172 Q.—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government have received any communication from the Chairman of the Estimates Committee (1958–59) regarding the storage of unaccountable petrol in the Nagercoil Transport Depot ; and

(b) the steps taken by the Government to take appropriate action against any irregularity?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) Necessary instructions were issued to the District Transportation Superintendent, Nagercoil to maintain proper account in respect of the fuel drained from vehicles.

Agriculture and Veterinary College

* 173 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) விவசாயம், கால்நடைக் கல்லூரிகளுடைய போதனை முறைகளையும், ஆராய்ச்சிகளையும் அதிகப்படுத்துவதற்காக அமெரிக்க தொழில் நுட்ப ஒத்துழைப்புக் குழுவால் உதவி செய்யப்பட்டத் தொகையிலிருந்து சென்னை ராஜ்யத்திலுள்ள எந்தெந்த கல்லூரிகளுக்கு எவ்வளவு உதவி அளிக்கப்பட்டது?